Registered as a news paper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | தை — 1971 | விலை 30 | இதழ் 1 |
|---|---|---|---|---|

# பொங்கல் திருநாள்

## யாருடையது?

ஒரு திருநாளைக் கொண்டாடுவதற்கு அரிசியை உலையிலிட்டுப் பொங்கும் வழக்கம் இந்து மதத்தினருக்கு மட்டும் உரிய ஒன்றன்று. இந்தியாவிலும் இலங்கையிலும் மூன்று இராசாக்கள் பொங்கல், அந்தோனியார் பொங்கல், தேவ மாதா பொங்கல், வனத்துச் சின்னப்பர் பொங்கல் என்று வெவ்வேறு பொங்கல் விழாக்களைக் கத்தோலிக்க தமிழ் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.



தை பொங்கல் தமிழர் விழா. அது தமிழர்களின் உழவு விழா. தாம் பெரும் பாடுபட்டுச் செய்த வேளாண்மையை அறுவடை செய்து, அதன் முதற் பலனைப் பாலுடன் பானையிலிட்டு பொங்கி மகிழ்ந்து, இறைவனுக்கு நன்றித்துதி செலுத்தும் திருவிழாவே தை பொங்கல். விளைச்சலுக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தும் மரபு தமிழ் மக்களுக்கு மட்டும் உரியதன்று. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் அறுவடைத் திருநாளை ஆண்டவனுக்கு நன்றி செலுத்தும் பெருநாளாகக் கொண்டாடுகின்றார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலும், உலகின் பிற பகுதிகளிலும் அறுவடைத் திருநாள் வெவ்வேறு காலங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கையில் அறுவடைக்குரிய மாதம் தையன்று, மாசியே. ஆகவே, அறுவடைத் திருநாளைத் தைமாதத் தொடக்கத்தில் கொண்டாடுவது அவ்வளவு பொருத்தமானதன்று. எனினும், இந்தியாவில் தமிழ் மக்கள் அறுவடைத் திருநாளை நீண்ட காலமாக தை மாதத் தொடக்கத்தில் கொண்டாடி வருவதால், ஒற்றுமையின் காரணமாக தை மாதத்தில் பொங்கல் விழாவை நாமும் கொண்டாடுதல் நன்றாகும். ஆகவே, பொங்கல் விழாவை இல்லங்களிலும், ஆலயங்களிலும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி விளைச்சலுக்கு இறைவனுக்கு நன்றித்துதி செலுத்துவோம். ''அனைத்துலக இறைவா, உம்மைப் போற்றுகின்றோம். ஏனெனில் உமது அருட்பெருக்கிலிருந்து இந்த உணவைப் பெற்றுக்கொண்டோம். நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த உணவுக்கு உமக்கு நன்றித் துதி கூறுகின்றோம். எமது நில புலங்களையும் உழைப்பையும் என்றும் உமது ஆசீரால் நிரப்பியருளும். ஆமென்'' ★

''திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத் திருவருட் சாதனங்கள்.

**துணை ஆயர்**

இயேசுநாதர் விண்ணகத்திற்கு எழுந்தருளுமுன் தம் அப்போஸ்தலருக்கு இந்தக் கட்டளையைக் கொடுத்தார்: ''நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்'' (மத். 28, 19-20). அப்போஸ்தலர் பரிசுத்த ஆவீயைப் பெற்றபின் கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களுக்குப் போதித்தனர். மனந் திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர் (அ. ப. 2, 41; 8, 38). புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்மீது தங்கள் கைகளை விரித்து அவர்களுக்குப் பரிசுத்த ஆவியையும் அளித்தனர் (அ. ப. 8, 17; 19, 6). திருமறையைத் தழுவி ஞானஸ்நானம் பெற்றவர்கள் ''அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும், செபிப்பதிலும் நிலையாயிருந்தனர்'' (அ. ப. 2, 42). ''அப்பம் பிட்குதல்'' என்பது நற்கருணைப் பலிவிருந்தைக் குறிக்கின்றது (அ. ப. 2, 46; 20, 7;).

ஞானஸ்நானத்திற்கும் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை புனித சின்னப்பர் ஆதிக் கிறிஸ்தவ சபைகளுக்கு எடுத்து விளக்கினர். (உரோ. 6, 3–11; கொலோ. 2, 12-14). இதன் விளைவாக, மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் பொதுவாக கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் நினைவு நாளாகிய ஞாயிறு வாரத்திலும், சிறப்பாக பாஸ்கா பெருவிழாவின் போதும் அளிக்கப்படலாயிற்று, ஞானஸ்நானம் பெற்றவர்கள் வளர்ந்தவர்களாகவே இருந்தமையால் அவர்கள் உறுதிப்பூசுதல் எனும் திருவருட் சாதனத்தையும் பெற்று, நற்கருணைத் திருப்பலியில் பங்குகொண்டு திருவிருந்தும் அருந்தினர். இதன் காரணமாக ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேவநற்கருணை என்னும் மூன்று திருவருட்சாதனங்களும் கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத் திருவருட்சாதனங்கள் என்று அழைக்கப்பெற்றன.

ஞானஸ்நானத்தினுல் மனிதர் கிறிஸ்துவோடு முதல் முறையாக இணைக்கப்படுகின்றனர்; தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுகின்றனர்; மனித இயல்புக்குரிய நிலையிலிருந்து இறைவனின் சுவீகாரப் பிள்ளைகளென்ற உன்னத நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர்; நீரினுலும் பரிசுத்த ஆவியினுலும் ஒரு புதுப்படைப்பாகின்றனர்; இறைமக்கள் கூட்டமாகின்றனர்.

உறுதிப்பூசுதலில் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவி என்னும் உன்னத கொடையால் முத்திரிக்கப்பெற்று, கிறிஸ்துவின் சாயலை மேலதிகமாய்ப் பெறுகின்றனர். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, அகில உலகிற்குமுன் கிறிஸ்துவுக்குச் சாட்சியமளித்து, அவரது மறையுடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பும் வேலையில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர்.

ஞானஸ்நானம் உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனங்கள் தம் இயல்பின்படி கிறிஸ்தவ மக்களை நற்கருணைப் பந்திக்கே இட்டுச் செல்கின்றன. ''விசுவாசத்தாலும் ஞானஸ்நானத்தாலும் இறைவனின் பிள்ளைகளாக்கப்பட்டுள்ள யாவரும் ஒன்று கூடி வந்து இறைவனைப் புகழ்வதையும் திருப்பலியில் பங்கெடுப்பதையும், ஆண்டவரின் திருப்பந்தியில் அமருவதையுமே அப்போஸ்தல அலுவல்கள் தம் நோக்கங்களாகக் கொண்டுள்ளன'' என்று 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூறுகின்றது (இறைபணி, 10). ஆகவே, ஞானஸ்நானமும் உறுதிப்பூசுதலும் பெற்றவர்கள் நித்திய வாழ்வைப் பெறும் பொருட்டும், இறைமக்களின் ஒற்றுமையை வெளிக்காட்டும்படியும் நற்கருணைப் பந்தியிலமர்ந்து கிறிஸ்துவின் திரு உடலையும் இரத்தத்தையும் அருந்துகின்றனர்; தங்களைக் கிறிஸ்துவோடு ஒப்புக்கொடுப்பதால் அவரது பொதுப் பலியில் பங்குபற்றுகின்றனர்; மனுக்குலம் முழு

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாறிய நெஞ்சம்

மரியகொறற்றி யோசப்
மட்டக்களப்பு.

ஆதவன் கிழக்கு வானில் தோன்றித் தன் ஒளிக்கதிர்களை மெல்லப் பரப்பத் தொடங்கினான். (இருள் பூமியை விட்டு நகர்ந்தது.) அன்று மார்கழி மாதமாகையால் இருள் முற்றாக நீங்கவில்லை. கதிரவனின் செங்கதிர்களைப் பூமகளிலே பவனிவரவிடாமல் தடுத்தது அந்தக் காரிருள் மேகம். அமைதியாக இருந்த உலகம் இப்போது ஆரவாரம் செய்தது. மலர்கள் தம் பட்டுப்போன்ற இதழ்களை விரித்தன. பறவைகள் தம் துணைகளோடு குஞ்சுகளுக்கு இரை தேடச் சென்றன. தொழிலாளர்கள் தம் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தத்தம் தொழிலகம் நோக்கிச் சென்றனர். அவ்வேளையில் கிறிஸ்துவின் குரலொலிபோல் ஒலித்தது கோயில் மணிகள். மணிகளின் ஒலியைக் கேட்ட மாந்தர் எல்லோரும் மனுமகனைத் தம் இதயத்தில் பெற்றுக்கொள்ள கோயில் இருக்கும் திசையை நோக்கி விரைந்து சென்றனர்.

அந்த இன்பகரமான நாளிலும் கூட ஒரு இதயம் மட்டும் அந்த மாசற்ற செம்மறிப் புருவையைத் தன்னிருதயத்தில் பெற்றுக் கொள்ள சக்தியில்லாமல் கட்டிலிலே முடங்கிக்கிடக்கிறது. அவரைப்பற்றி நினைக்கவே அந்தப்பாவி மனம் கூசியது. அனலில் இடப்பட்ட மெழுகுபோல் துடிதுடித்தது. பாவ வாழ்க்கையில் தன் காலத்தைக் கடத்திய அந்த உருவம், எல்லோரையும் போல எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தொழிலகம் செல்லாமல் படுக்கையிலேயே புழுவாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. அந்த நெஞ்சம் ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் தன் கடந்தகால வாழ்வை எண்ணி அலைமோதியது. உறங்குவது போல் அந்த மனித உருவம் தன் கண்களை மூடிக்கொண்டாலும் நிஜமாகவே அது தூங்கவில்லை. பூமி அதிர்ச்சியால் நொறுங்கிச் சிதறிய எரிமலையாக மாறியுள்ளது அந்த மனம். அந்த குளிர்மையான அதிகாலை வேளையிலும் தலை சுழல்வது போலிருந்தது. இத்தனை துன்ப துயரங்களுக்கும் ஆளாகித் தவித்தான் அந்தச் செல்வச்சீமான் ஆசீர்வாதத்தின் ஒரே மகன் ''**யேசுதாசன்**'' ஆசீர்வாதம் செல்வச் செழிப்பிலே மிதந்தாலும் ஆண்டவனின் ஆணைகளை வெறுத்துத் தள்ளவில்லை. அதில் அவர் அக்கறையுடன் இருந்தார். அவர் மட்டுமல்ல அவரின் மனைவியாகிய மேரியும்கூட. யேசுதாசன் மட்டும் அவர்களோடு சேர்ந்து வாழ விரும்பவில்லை. அவர்களை அவன் பட்டிக்காடு என்று வெறுத்து இக்காலப்போக்கில் தன்னைப் பாழக்கினான்.

அவன் சிந்தனையில் மூழ்கி இருக்கும் அவ்வேளையில் அவனது அன்புத்தாய் மேரி கையில் காப்பியுடன் யேசுதாசனின் அறைக்குள் நுழைந்தாள். பத்து மாதம் சுமந்துபெற்றுப் பாலூட்டி வளர்த்த அன்புக் கரமல்லவா அது. அவளுடைய கரங்கள் அவனைத் தடவிக் கொடுத்தன. தாசன் என்ற செல்லமான சொல்லைக் கக்கியது அவளது வாய். தாயின் குரலைக் கேட்ட மகன் சிந்தனையில் இருந்து விடுபட்டுத் தாய் கொண்டுவந்த காப்பியை வாங்கி அருந்தினான். அவனது சிந்தனைகளெல்லாம் எங்கோ ஓடி மறைந்தன. ஆனால் அவனுடைய உளவாட்டம் மட்டும் மாறவில்லை. தந்தையின் முகவாட்டத்தையும் தனயனின் உருமாற்றத்தையும் கண்ட தாய் திகைத்தாள். நடந்தவற்றைக் கேட்கத் துடித்தது அந்தத் தாய்மையுள்ளம். தாயின் ஆவலைக் கண்ட தனயன் தன் கதையைக் கூறினான். அவற்றைக் கேட்ட தாய் தன் மகன் இப்படி நடந்தானா? என்று ஆச்சரியப்பட்டாள். கதை முடிந்து யேசுதாசன் தன் தாயைப் பார்த்தான். அவள் அசையாமல் சிலைபோல் இருந்து கண்ணீர் வடித்தாள். பெற்றமனம் அல்லவா? "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்பார்கள் முதியோர்கள். அதுபோலவே நிகழ்ந்தது தாசனின் வாழ்க்கையிலும். தாயின் கண்ணீரைத் துடைக்கத் துடித்தன அவனது கரங்கள். அதற்கிடையில் தாய் தன் கண்ணீரை அடக்கிக்கொண்டு சமையல் அறைக்குள் நுழைந்தாள். யேசுதாசனும் தன் படுக்கையை விட்டெழுந்து குளியல் அறைக்குள் நுழைந்தான்.

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## "மாறியது நெஞ்சம்"......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மனிதனின் வாழ்க்கையில் வரும் இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே இவ்வுலக வாழ்க்கையில் நடமாடும் ஒவ்வொரு மனிதனும் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ள வேண்டுமென்பது கடவுளின் நியதி. அவன் இன்பத்தை விரும்பி துன்பத்தை வெறுத்துத் தள்ளினாலும் அது அவனால் முடியாத காரியம் ''அவனின்றி அணுவும் அசையாதல்லவா'' ஆண்டவனின் திருவுளமே மனிதன் நடமாடும் பூமியில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இவை அனைத்துக்கும் ஏற்ப அமைந்தது அந்தப் பணக்காரப்பிள்ளை யேசுதாசனின் வாழ்க்கை. பாடசாலைப்படிப்பை முடித்துக் கல்லூரியை விட்டு வெளியேறிய யேசுதாசனுக்கு உயிர் நண்பனாக வந்து சேர்ந்தான் பாஸ்கரன் என்னும் இந்துமத வாலிபன். தொடக்கத்தில் அன்பே உருவாகி தாசனுக்கு உறுதுணையாக இருந்தான் பாஸ்கரன். இதனால் இளகிய மனம் படைத்த தாசன் அவன் அன்புக்குக் கட்டுப்பட்டான் பாஸ்கரனின் கபடமுள்ள இதயத்தை அறியாத தாசனும் நெருங்கிப்பழகினான். இதன் பலனாக பாஸ்கரனின் தங்கையான கிளப்நடனக்காரி மாலாவின் காதலனானான். இதனால் ''துஷ்டரைக் கண்டால் தூர விலகு'' என்ற முதுமொழியை மறந்து, ''பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும்'' என்ற மொழிக்கேற்ப தன் வாழ்க்கையைத் தொடங்கினான். மது அருந்தினான். சூது விளையாடினான். மாலாவோடு சேர்ந்து கிளப்பிலே நடனம் ஆடினான். ஓட்டல்களில் உணவருந்தினான். காலம் தவறி வீட்டுக்கு வரத்தொடங்கினான். இவைகளைக் கேட்க அப்போது சக்தியில்லாமல் இருந்தனர் அவனது பெற்றோர்கள். பாஸ்கரனின் அன்புக்கு அடிமையாகிவிட்ட யேசுதாசன் அவனுடைய தீய சொற்களுக்கும் நடத்தைகளுக்கும் அடிமையாகிவிட்டான். ஆலயமணிகள் ஒலித்தவுடன் ஆண்டவனின் குரலொலி என்று நினைத்து ஆலய வாசலையே நாடிய அவனது கால்கள், இப்பொழுது ஆலயமிருக்கும் பக்கமே செல்வதில்லை. சொல்லப்போனால் யேசுதாசன் பெயரளவில்தான் கத்தோலிக்கன், ஆனால் செயலளவில் அவன் கத்தோலிக்கன் அல்ல, வெறும் அஞ்ஞானியே. இவையனைத்துக்கும் காரணம் பாஸ்கரனும் அவனது தங்கை மாலாவுமே.

நாட்கள் பல ஓடி மறைந்தன. ஒரு நாள் யேசுதாசன் வழக்கம் போல் காலம் தவறி வீடு வந்து சேர்ந்தான்; அவன் எதிர்பாராத பேரிடி ஒன்று அவனுக்குக் காத்திருந்தது. அதாவது பாஸ்கரனின் இவ்வுலக மறைவு. பாஸ்கரன் குடியினால் தன் உடலைப் பாழாக்கி இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டான். ஆனால் அவன் யேசுதாசனுக்குப் பழக்கிய அந்தத் தீய பழக்கங்கள் மட்டும் யேசுதாசனிடம் இருந்து மறையவில்லை. யேசுதாசன் வந்ததும் வராததுமாக அவனது தந்தை ஆசீர்வாதம் தாசன் இங்கே வா என்று கோபக்கனல் பறக்கும் கண்களோடு அவனைப் பார்த்துக் கூப்பிட்டார். தாசன் பயந்து கொண்டு தன் தந்தையிடம் சென்றான். தந்தையின் அன்பைப்பெற்றிருந்த தாசன் இப்போது அவரது கோபத்துக்கு ஆளாகிவிட்டான். அவனது தந்தை பேச்சை ஆரம்பித்தார் உனது நண்பன் பாஸ்கரன் இறந்துவிட்டான். அவனது தங்கை மாலாவை நீ கெடுத்துவிட்டாய். அவளது பெண்மைக்கே களங்கம் ஏற்படுத்திய நீ இப்போது எப்படியும் அவளை மணந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார் ஆசீர்வாதம். அவன் மௌனமாக நின்றான். ''ம்........சீக்கரம் ஆம்.'' என்று கர்ஜித்தார் அவனது தந்தை. ''ஆம்'' என்று தலையை அசைத்தான் யேசுதாசன்.

நாட்கள் இரண்டு ஓடி மறைந்தன. யேசுதாசனின் மடல் மாலாவின் கரம் கிடைத்தது. மாலா யேசுதாசனின் வீட்டுக்குவந்தாள். அவளை உபசரித்தாள் அவனது தாய். அவளின் வாழ்க்கையின் கதையைக் கேட்டார் அவனது தந்தை. மாலாவும் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். மாலா ஞானஸ்நானத்தின் வழியாக ஆஞ்சலாவாக மாற்றப் பட்டாள். கிறிஸ்துநாதரின் பிறந்த தினம் வரும் அதே மாதத்தில் மாலா ஆஞ்சலாவாக திருச்சபையில் ஒரு புது உறுப்பாகப் பிறந்தாள். அவள் இப்போது கிறிஸ்துநாதரின் மந்தையின் ஆடுகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுவிட்டாள். அடுத்த நாள் காலைப்பூசை வேளையில் யேசுதாசனும் ஆஞ்சலாவும் மெய்விவாகம் என்னும் தேவதிரவிய அனுமானம் பெற்றார்கள்.

தன் அன்பு மனைவியின் வார்த்தைகளால் அஞ்ஞானியாகத் தன் காலத்தைக் கடத்தி வந்த யேசுதாசனின் **நெஞ்சம் மாறியது.** தனது மனைவியுடனும் தனது பெற்றோர்களுடனும் கிறிஸ்துவின் பிறந்த தினத்தை என்றுமில்லாக் குதுகலத்துடன் கொண்டாடினான். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்விலோர் பெருநாள்

## 4-12-70

பல்லாயிரம் பகலவர்கள் ஒன்று திரண்டு, ஒளியூட்டியதுபோல மின்னொளி வீசிப் பட்டப்பகலெனக் காட்சியளித்த கட்டுநாயக்கா விமானத்தளத்தில் சரியாக பி. ப. 7-55க்கு பரி. பாப்பரசர் 6வது சின்னப்பரை ஏந்திவந்த எழில் விமானம் இறங்கியபோது ''வாழ்க எம் பாப்பரசர்'' என்றெழுந்த இடியோசையில் நாங்களும் கலந்துகொண்டோம்.



என்றும் பேரிளமை குன்ரு நம் திருச்சபையின் வளர்வியக்கம் போலவே 73 வயது நிரம்பிய பாப்பரசர், ஆசீரும், ஆதரவும் அளிக்கும் அக முக அங்க அசைவுகளுடன் மக்களிடை பவனிவந்து, ஆசீரளித்து, வாழ்த்துப் பெற்று, மீண்டும், அழகிலும், அளவிலும் உயர்ந்து விளங்கிய திருப்பலி பீடத்தை நோக்கி, பலி ஆடை அலங்காரராய், திருப்பலித் துணைவர்களுடன், ஊர்வலமாக எழுந்தருளியபோது, அன்று நமதாண்டவர் வெற்றி வீரராய்த் துணைவர்களுடன் ஜெருசலேம் நகருட் பிரவேசித்த மாபெரும் காட்சியையே நினைவூட்டியது.

நாம் எங்கிருக்கிறோம்? உரோமாபுரியிலா, ஜெருசலேமிலா, அன்றி கட்டுநாயக்காவிலா என்று உணரமுடியாத பரவச நிலையில், அமைதி நிலையில் ஆழ்ந்திருந்த பக்தர் கூட்டத்துடன் நாங்களும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தோம். இறைவன் பிரதிநிதியின் திருக்கரங்களால் திருவிருந்தும் பெற்றோம். என்னே இறைவன் பேரருள்!

''யாரென்றறியத் தகாவனை அரசுமாக்கி, முடியும் சூட்டி'' என பாரதத்தில் கன்னன் கூறிய நன்றியுரை மனதில் எழுந்தது. நான் யார், என் மனைவி யார், இந்தப் பெறற்கரும் பெரும் பேற்றுக்கு? உரோமாபுரி எங்கே! நாங்கள் எங்கே! பாப்பரசரைக் காண்பதாவது, அவருடன் பலி ஒப்புக் கொடுப்பதாவது, அதிலும் மேலாக அவர்தம் அருட் கரங்களால் திருவிருந்து அருந்துவதாவது என்ற எண்ணங்கள் மென்மேலும் எழுந்துகொண்டே இருந்தன, இருக்கின்றன.

இறைவன் திருவருளை, திட்டத்தை யாரால் மதிப்பிட முடியும்! ஏதோ வகையில் இந்த அருந்தருணத்தை எங்கட்கு அளித்தார் என்பதை ஆழ்ந்த நன்றியுடன் எண்ணி மகிழ்கிறோம்.

பாப்பரசர் வருகை, நமக்களிக்கும் நற்பயன்கள் பல. 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் இறைமக்கள் யாவரும், எல்லா மக்களுடனும் ஒரே சமூகமாக வாழவேண்டும்; மறைத் தலைவர்களும் மக்களுடன் கலந்து பழகவேண்டும் எனத் திருச்சபை இன்றளிக்கும் போதனைக்குச் சிறந்த சாதனையாக, முன்மாதிரியாக அமைந்துள்ளமை ஆழ்ந்து அறிந்து போற்றற்குரியது.

அன்று கட்டுநாயக்காவில் பரி. பாப்பரசரை வரவேற்க நம் நாட்டுச் சகல மதத் தலைவர்களும் வருகை தந்தனர். உபசரித்தனர். தம் சகோதர மனப்பான்மையை வெளிக்காட்டினர். ஒரு சாரார் தவிர ஏனைய எல்லாத் தலைவர்களும் திருப்பலி வேளையிற்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

### (உ) இயேசுவின் புதுமைகள் (2)

(லூக். 8, 40 – 56)

இப் புதுமைகளிரண்டும் நடைபெறக் காரணமாக இருந்தது என்னவென்ருல், இரண்டுபேரில் காணப்பட்ட விசுவாசம் என்னும் புண்ணியமே, இவ் விரண்டு புதுமைகளும், பெண்வர்க்கத்திற்காக, அவர்களின் நலன் கருதிச் செய்யப்பட்டன. சமூக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், பெண்களின் நிலைமை, மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த காலம் அது. பன்னிரெண்டு வருடங்களாக வருத்தத்தால், பாதிக்கப்பட்ட பெண்ணின் விசுவாசத்தை முதற் புதுமையிலும், பன்னிரெண்டு வயதுப் பெண்ணின் தகப்பனின் விசுவாசத்தை, இரண்டாவது புதுமையிலும் நன்ருக எடுத்துக்காட்டியுள்ளார் எழுத்தாளர் லூக்காஸ். மேலும், யூதரல்லாத மக்களிடமும் இவ்வளவு பாரிய விசுவாசமிருக்கிறதை விளக்கமாகக் கூறுகின்ருர்.

இயேசு, அப்போஸ்தலர்களுடன், ஏரியின் மேற்குக் கரையை வந்தடைந்ததும், அவரின் வரவை எதிர்பார்த்து நின்ற, பெரும் திரளான மக்கள் கூட்டம், அவரைச் சந்திப்பதற்காக ஓடிப்போனுர்கள். அவர்களில் ஒருவன் பெயர் யாயீர் என்னும் செபக்கூடத் தலைவன். இவனுடைய பன்னிரெண்டு வயதான ஒரே மகள், சாவின் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தாள். கிறீஸ்துவின் புதுமைகளை செபக் கூடங்களில் இவன் கண்டிருக்கக்கூடும். கிறீஸ்து, தன் கைகளை நோயாளிகள்மீது நீட்டி, சுகமாக்கியபடியால், தன் மகளுக்கும் அப்படியே வந்து செய்யும்படி, இயேசுவின் காலில் விழுந்து வேண்டினுன். உடனே, இயேசு எழுந்து, தன் அப்போஸ்தலர்களுடன் போகும் வழியில், திரளான மக்கள் கூட்டம், அவரைச் சூழ்ந்துகொண்டே சென்றது.

பன்னிரெண்டு வருடங்களாக, பெரும்பாட்டினுல் வருந்திய பெண், தன்னிடமிருந்த பணமெல்லாம், இவ்வருத்தத்திற்காகச் செலவுசெய்துவிட்டாள். சுகமாக்க முடியாத ஒரு வியாதி என்று, வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்டுவிட்டாள். இந் நிலையில், இவள், தேவன்மேல் தன் முழு விசுவாசத்தையும், நம்பிக்கையையும் சுமத்திவிட்டாள். எனவேதான், இயேசுவின் அரிய பெரிய செயல்பற்றிக் கேள்விபட்டிருந்த இந்த மாது, ''அவரின் உடுப்பின் விழிம்பைத் தொட்டாலே போதும் நான் சுகமாவேன்'' என்று நம்பினுள். அவள் நம்பிக்கை வீண்போகவில்லை. இது எப்படி நடந்தது என்பதற்கு, லூர்து பதி, பாத்திமா போன்ற இடங்களில் நடந்தேறும் புதுமைகளே சாட்சி கூறுகின்றன.

''என்னைத் தொட்டது யார்?''. இக் கேள்வியின் வாயிலாக, இயேசு அநேக உண்மைகளை, யூத சனத்துக்கும், அங்கிருந்த சனக் கூட்டத்துக்கும் எடுத்துக் கூருமல் கூறுகின்ருர். தன்னிடமிருந்து புறப்பட்ட சக்தியை யேசு நன்கு அறிவார். அந்தப் பெண்ணிற்கு நடந்தேறிய புதுமையையும் அவர் நன்கு அறிவார். ஆனுல் இதை அவளின் வாயிலிருந்து எடுப்பதினுல், அவளுக்கும், அங்கிருந்தவர்களுக்கும் ஏற்படக்கூடிய பல நன்மைகளையும் அவருக்குத் தெரியும். பின்பு

## அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

அவளை நோக்கி, ''மகளே! உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று. சமாதானமாய்ப் போ'' என்ருர். உடனே சரீர சுகத்தோடு, ஆத்தும சுகமும் அவளுக்கு அருளப்பட்டது.

இயேசு, இவ்வண்ணம் நடந்துகொண்டிருக்கிறபொழுது, செபக்கூடத் தலைவனுக்கு அவனுடைய ஒரே மகள் இறந்துவிட்டதாகவும், போதகரை இனித் தொந்தரவு செய்ய வேண்டாமென்றும், தகவல் கிடைத்தது. இயேசு, நோயாளிகளைச் சுகப்படுத்துவாரே தவிர, மரித்தவர்களுக்கு உயிர்கொடுக்க முடியாதென்று, இவர்கள் நினைத்திருக்கிருர்கள் போலும்! செபக்கூடத் தலைவனுக்கு, இன்னும், கிறீஸ்துவில் நம்பிக்கையிருக்கிறது.

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

## 3. ஆலயத்தின் அவசியம்

'அப்பா! நாம் எல்லாரும் கோவிலுக்குப் போவதின் அவசியத்தைப்பற்றி நீங்கள் விளக்கம் கொடுத்தீர்களே, அவைகளை நான் ஏற்றுக் கொண்டேன். ஆனால் எனக்கு ஒரு சிறு சந்தேகம், அதாவது, இந்தக் கோவில்களை எதற்காக இவ்வளவு பெரிதாகவும் ஆடம்பரமாகவும் கட்டவேண்டும்?'

'பொருத்தமான கேள்வி. இது மாத்திரம் அல்ல, எங்கள் மேற்றிராசனத்தில் 'சாமிமார் இருப்பதற்கு எதற்காக இவ்வளவு பெரிய வீடு கட்டி இருக்கிறார்கள்' என்றுகூட என் காது கேட்க எத்தனையோ பேர் கேட்டிருக்கிறார்கள். கேள்விகள் கேட்பது இலகு மலர்விழி, ஆனால் கேள்விகளுக்குரிய பதில்களைக் கண்டு பிடிப்பதுதான் கடினம். ஆனால் நீ கேட்ட கேள்விக்கும், பெரிய வீட்டை ஏன் கட்டினார்கள் என்ற கேள்விக்கும் பதில் காண்பது அவ்வளவு சிரமம் அல்ல. தோழுக்கு மேல் 'தலை' இருந்தால் இலகுவாகக் கண்டு பிடித்திருக்கலாம்.

முதலாவது பெரிய கோவில்களை ஏன் கட்டி எழுப்பினார்கள் என்பதை விளக்குகிறேன் கேள். ஆதியில் மனிதன் கடவுளுக்கு என்று தன்னிடம் உள்ளவற்றில் சிறந்ததையே பலியாகவும் பரிசாகவும் கொடுத்து வந்துள்ளான். இதற்கு ஆபேல், ஆபிரகாம், மெல்கிசெடெத் இவர்கள் வாழ்க்கைக் குறிப்புகள் சான்றாகவுள்ளன. அதேபோல் மனிதன் தன்னிடம் இருக்கும் கலைத் திறமையையும் கடவுள் குடிகொள்ளும் இடமெனக்கருதிய ஆலயத்தின்மேல் செலவிட்டான். இதற்கு எடுத்துக்காட்டாய் இருந்தது சலமோன் இராசா கட்டியெழுப்பிய ஜெருசலேம் தேவாலயம். இதைப்பற்றி நீ தெளிவாக அறிய விரும்பினால் வேதாகமத்தை எடுத்து நான் கூறுகின்ற பகுதிகளை வாசித்துப்பார். முதல் அரசராகமத்தில் ஆறும் அத்தியாயத்தில் இத் தேவ லயத்தின் விஸ்தீரணம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதையும், இரண்டாவது நாளாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தில் தேவாலயம் கட்டுவதற்காக சேர்க்கப்பட்ட ஆட்களின் தொகையையும், தேவாலயத்தின் பீடத்தின் வர்ணனையை இரண்டாவது நாளாகமத்தின் நாலாவது அத்தியாயத்திலும் வாசித்தறியலாம்.

அக்காலத்தில் விளங்கிய கலைத்திறன் எல்லாம் இத்தேவாலயம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. அதேபோல் அவன் தன்னிடம் இருந்த விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் அதற்காகச் செலவிட்டான். இத் தேவாலயம் இத்துணை பெரியதாக இருந்ததால் அதில் பல்லாயிரம் பாமர மக்கள் உழைத்தார்கள். ஆகவே பெரிய தேவாலயங்கள் கட்டும் பொழுது மனிதன் கடவுள் மேல் தனக்குள்ள விசுவாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றான். அதே நேரத்தில் ஊர் மக்களுக்கும் வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது. அக்காலத்தில் கட்டப்பட்ட தேவாலயங்களில் இருக்கும் சிற்பக்கலையின் திறனைக் கண்டு மக்கள் இன்றும் மலைத்துப் போகிறார்கள். அன்று வாழ்ந்த மக்கள் இவ்வளவு பெரிய தேவாலயங்களையும், அதனை அலங்கரிக்க அழகிய சிற்பக் கலையையும் பயன்படுத்தியிருக்காவிட்டால் இன்று வாழ்கின்ற நாம் அக்கால மக்களின் பெருமைகளையும் வாழ்க்கை முறைகளையும், அவர்களின் நாகரீகத்தையும் அறிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும் அல்லவா மலர்விழி.

ரொம்பக் 'கறெக்ட்' அப்பா. பெரிய தேவாலயங்களை கட்டுவதால் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பும், தங்கள் கலைத் திறனைக் காட்டும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது என்பதை நான் எற்றுக் கொள்ளுகிறேன். அதேபோல் பெரிய வீட்டைக் கட்டியதால் எங்கள் மேற்றிராசனத்தில் இருக்கும் குருக்களுக்கு குசாலாக இருக்க வீடும் இடமும் கிடைக்கிறது என்று சொல்லப் போகிறீர்களோ!

[8ம் பக்கம் பார்க்கவும்]

— தேவப்பிரியன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ வாழ்வு ... ...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

மலர்விழி! நீ குருக்களைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணம் மிகவும் கீழானது. இதை நான் உன்னிடம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்களிடம் குறைகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் குற்றங்களை மன்னித்து குறைகளைப் பொறுத்து அவர்களை எங்கள் உற்றவர்போல் நடத்துவதுதான் கிறிஸ்தவர்களாகிய எங்கள் கடமை. அவர்களை நாம் 'தந்தை' என்று அழைக்கிறோம். ஆனால் எங்கள் நடத்தையிலோ அவர்களை அப்படி உணர்ந்து நடத்தத் தவறி விடுகிறோம். இதனால் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கும் பெருமை, மதிப்பு இவைகளையும் குறைத்து விடுகிறோம். அவர்கள் சிறு குற்றம் செய்தாலும் அவைகளைப் பெரிதாக்கிப் பேசி அவர்களுடைய பெயர்களைக் கெடுக்கிறோம். இது ஒரு புற்று நோய் போன்றது. இது கிறிஸ்தவ சமுதாயத்தில் இருந்து அறவே அகற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் கிறிஸ்தவ சமுதாயம் ஈடேற்றம் அடையும். இதில் அதிமுக்கிய கெடுதியும் கேடும் என்னவென்றால் சில பெற்றோர்களே இக்கெடுதிக்குக் காலாய் இருக்கிறார்கள். இதனால் எத்தனையோ இளம் பிள்ளைகளின் மனம் நஞ்சாகி விடுகின்றது. அம்மா! மலர்விழி, நீ இதில் ஒருபொழுதும் இறங்கக்கூடாது.

அப்பா, என்னை மன்னித்துவிடுங்கள். இவ்வளவு பண்புள்ள உங்கள் மகள் பண்பற்ற முறையில் நடந்துவிட்டது இதுவே முதற்தடவையாகவும், கடைசித் தடவையாகவும் இருக்கட்டும். இனிமேல் நான் குருக்களைப் பற்றியோ, கன்னியர் சன்னியாசிகளைப் பற்றியோ குறையாக எதுவுமே பேசமாட்டேன். அப்படி ஏதாவது இருந்தாலும் அவர்கள் அதில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்று இறைவனை வேண்டுவேன்.

மலர்விழி இதுதான் நல்ல பெண்ணுக்கு அழகு. இதுதான் நல்ல மனிதர் பண்பு. **குற்றம் புரிவது மனித இயல்பு. ஆனால் அதை உணர்ந்து திருந்தி வாழ முனைவது தான் பெரிய மனிதனின் கொள்கை.**

பெரிய வீடு கட்டி இருக்கிறார்களே என்பதனையிட்டுக் குறைபட்டுக் கொண்டாய். அப்படி அவர்கள் வீடு கட்ட வேண்டியதன் அவசியத்தை நான் விளக்குவேன். இப்பொழுது தயவு செய்து ஒரு ''ஸ்பெசல்'' காப்பி கொண்டுவா. ★

## மாணவர் மன்றம் ... ...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

இவனுடைய விசுவாசத்துக்கும், நம்பிக்கைக்கும் மெருகூட்டுவதுபோல, இயேசு செபக்கூடத்தலைவனை நோக்கி: ''அஞ்சாதே விசுவசி, அது போதும்; அவள் பிழைப்பாள்'' என்றார்.

வீட்டை அடைந்ததும், யூத வழக்கப்படி மரண வீட்டில் அனுசரிக்கும் முறைகளையெல்லாம் இயேசு கண்டு, ''அழவேண்டாம். அவள் சாகவில்லை. தூங்குகிறாள்'' என்றார். பிள்ளையின் மரணத்தை நன்கு அறிந்திருந்த மக்கள் கூட்டம் அவரைப் பகிடிபண்ணி, ஏளனம் செய்தது. பிள்ளையின் மரணத்தை, சிறிது நேர நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசியதை இவர்கள் அறியவில்லை போலும்! இன்னும் சில விநாடிகளில், அவள் உயிர்பெற்று நித்திரையிலிருந்து எழும்புவது போல எழும்பவிருக்கிறாள் என்பதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை! பிள்ளைக்கு உயிர்கொடுக்கும் சமயத்தில், இராயப்பர், இயாகப்பர், அருளப்பர் என்னும் அப்போஸ்தலர்களும், அப்பிள்ளையின் பெற்றோரும் பிரசன்னமாயிருந்தனர். இந்த மூன்று அப்போஸ்தலர்களும், கிறீஸ்து, தாபோர் மலையில் மறுரூபமான காட்சியையும், கிறீஸ்துவின் மரண வேதனையை ஒலிவ மலைத் தோட்டத்திலும் காண்பதற்கிருக்கிறார்கள்.

இயேசு, பிள்ளையின் அருகில் சென்று, அவள் கையைப் பிடித்து, ''குழந்தாய், எழுந்திரு'' (Talitha Kumi) என்று கூப்பிட்டார். அவள் உடனே எழுந்திருந்தாள்.

அவளுக்கு உணவு கொடுக்கும்படி பெற்றோரைப் பணித்தார். இதை எவருக்கும் சொல்லவேண்டாமென்று கட்டளையிட்டார். எனினும், நிகழ்ந்த சம்பவம், மற்றவர்களுக்குக் கூடிய கெதியில் தெரியவரும் என்பதும், அவருக்கு நன்கு தெரியும். இக்கட்டளையின் மூலம், நல்ல கிரித்தியங்களைச் செய்யும் போது, மற்றவர்கள் அதைக் கண்டுபிடிக்க வேண்டும், புகழவேண்டுமென்று செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், கடவுள் முன்னிலையில் பலனை இழந்துபோகின்றோம் என்று காட்டவிரும்பினார்.

அவஸ்தைப் பூசுதல் என்னும் தேவதிரவிய அனுமானம்பற்றி, ஒரு கிறீஸ்தவனின் அபிப்பிராயம் எப்படி இருக்கவேண்டுமென்பதை, புனித இயாகப்பர், தன் நிருபத்தில் எடுத்துரைக்கிறார். அவஸ்தைப் பூசுதல் என்னும் அருள்குறி ஆத்மசுகத்தைமட்டுமல்ல, கடவுளுக்குச் சித்தமானால், சரீரசுகத்தையும் அளிக்கின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வண. பிளாசிடஸ் சில்வா சுவாமி அவர்களின் மறைவு.

நாவற்குடா சின்ன லூர்து திருப்பதியின் பரிபாலகராகிய வண. பிளாசிடஸ் சில்வா சுவாமி அவர்கள் சென்ற மாதம் 21ம் திகதி கொழும்பிலுள்ள பெரிய வைத்தியசாலையில் சடுதியாகக் காலமானார் என்ற துக்ககரமான செய்தியை திருமலை - மட்டக்களப்பு மறை மாவட்டமும், நாவற்குடா யாத்திரிகர்களும் அறிந்து பேரதிர்ச்சியும் துயரமும் கொண்டனர். சுவாமி அவர்களின் பூத உடல் அவரது பிறப்பிடமாகிய மொறெட்டுவைக்கு எடுத்துச் செல்லப்பெற்று, மார்கழி 23ந் திகதி 9 மணியளவில் திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர், துணை ஆயர், 11 குருக்கள் ஆகியோரால் கூட்டுப் பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டபின், அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் இறுதிச் சடங்குகளில் சுவாமி அவர்களின் விருத்தாப்பிய தாயாரும், சகோதர சகோதரிகளும், மற்றும் உறவினரும், நண்பர்களும் பெருந் திரளான ஊர் மக்களும் பங்குபற்றினர்.



வண. பிளாசிடஸ் சில்வா சுவாமி அவர்கள் 1920ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ந் திகதி மொறெட்டுவையில் நல்ல கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். தமது உயர்தர கல்வியைச் சொந்த ஊரில் முடித்தபின், சிறிது காலம் உத்தியோகம் வகித்தார். பின்பு, ஆண்டவரின் அழைப்பிற்குச் செவிசாய்த்து, திருகோணமலை மேற்றிராசனத்தில் ஒரு குருவாகத் தொண்டாற்றும்பொருட்டு 1945ம் ஆண்டில் கண்டியிலிருந்த பாப்பரசரின் பெரிய குருமடத்தில் சேர்ந்தார். அங்கு குருத்துவ கல்வியைக் கற்று முடித்தபின் 1951ம் ஆண்டு ஆவணி மாதம் 24ந் திகதி குரு பதவிக்கு உயர்த்தப்பெற்றார். பின்பு, சின்னக்கடை, பாலையூற்று, தம்பலாகமம் முதலிய இடங்களில் சிலகாலம் உதவிப் பங்குக் குருவாகத் தொண்டாற்றினார். அதன்பின், அம்பாறை- இஞ்சினியாகலை என்னும் புதிய பங்கிற்குப் பொறுப்பான குருவாக நியமனம் பெற்று, பல ஆண்டுகளாக வெகு ஆர்வத்துடன் அயராதுழைத்தார். அதன் காரணமாக நோயுற்று, பிரான்சு தேசத்திலுள்ள தேவ அன்னையின் லூர்து பதிக்குத் திரு யாத்திரை செய்தார். அங்கு தேவ அன்னையின் அருளால் பூரண சுகமடைந்து மேற்றிராசனத்திற்குத் திரும்பி வந்து, நாவற்குடாவிலிருந்த சிறிய லூர்து பதியைத் திருத்தியமைத்து தேவ மாதாவின் பக்தியை வளர்க்க ஏறக்குறைய எட்டு வருடங்களாக அரும்பாடு பட்டு உழைத்தார். அத்துடன் பிறநாடுகளிலிருந்து பண உதவி பெற்று, நாவற்குடாவின் ஏழை மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பெரிய திட்டத்தை சித்திகரமாகத் தொடங்கிவைத்தார். கடைசியாக, மட்டக்களப்பு இளைஞர்களின் வருங்கால வாழ்க்கையை வளப்படுத்த விரும்பி, தச்சுத் தொழில், தோணி செய்தல் முதலிய வேலைகளில் பயிற்சி அளிப்பதற்காக ஒரு கூட்டுறவு நிலையத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். சுவாமி அவர்கள் திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலும் ,சிறப்பாக நாவற்குடாவிலும் ஆற்றிய அரும்பெரும் பணிகளை கத்தோலிக்க மக்களும், பிறமதத்தினரும் ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள். அவரது ஆன்மா சாந்தி பெறும்படி இறைவனை வேண்டுவோமாக.

## முக்கிய அறிவிப்பு

தொண்டனின் ஒவ்வொரு பிரதிக்கும் அஞ்சற் செலவு 10 சதம் ஆக அதிகரித்துள்ளபடியால், தனிப்பிரதியின் விலையை (அஞ்சற் செலவு உட்பட) 30 சதமாக உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

—நிர்வாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணிக்கை

**ஜெயம்**

மரியநாயகி ஆலயமணி வெகு அழகாக ஒலித்தது. ஆலயத்துள் பெருங்கூட்டம் குழுமியிருந்தது. வழக்கத்தைவிட சற்று அதிகமாகக் கூட்டம் இருந்ததால், அதன் காரணம் என்ன என்று அறிய முற்பட்டேன். அறிமுகமான ஒருவர் மூலம் அந்தக் காரணத்தைக் கேட்டவுடன், எனக்கு மிக ஆச்சரியமாகிவிட்டது. அவரது பதிலில் சந்தேகமும் ஏற்பட்டது. இதனால் அதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் பீடத்தடிக்குச் சென்று பார்த்தேன். அவர் சொன்னது சரி, மரியநாயகம் குருப்பட்டம் பெறப்போகிறான்தான். இதைவிட அவனது தாயை அவ்விடத்தில் கண்டதும் நான் காண்பது கனவா என்று எனக்குள்ளே கேட்டுக்கொண்டேன். அவ்வளவு வியப்பாக இருந்தது எனக்கு அவள் நிலை. மாதா திருச்சொரூபத்தின்முன் முழந்தாட் படியிட்டு வேண்டிக் கொண்டிருந்தாள். ஒரு காலத்தில் ''கோயிலுமில்லை குளமுமில்லை'' ''வாழ்க்கை வாழ்வதற்கே'' என்றுகூறிய தெரேசம்மாவா இப்படித் தெண்டனிட்டுக் கிடக்கிறாள்? இவையெல்லாம் மூடக்கொள்கை, வேலையற்றவனின் வீண் பொழுதுபோக்கு, மதம் மனிதனை அடிமையாக்குகின்றது என்றெல்லாம் கேலி செய்து இவைகளை வெறுத்தவளா, தனது ஒரே மகனை குருவாகித் தேவ பணி புரிய அனுமதிக்கிறாள்! இந்த நிலையில் பூசை தொடங்கியது, மனதை அலையவிடாமல் ஒருநிலைப்படுத்தி இறைவனைத் தியானித்தேன். மேற்றிராணி ஆண்டவர் பூசையைத் தொடங்கினார், வழமையான குருப்பட்டச் சடங்கு வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்தது.

ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் மரியநாயகத்துக்கு நல்லாசி கூறி விடைபெற்றுக்கொண்டிருந்தார்கள். இந்தக் கூட்டத்துடன் செல்லாமல் சற்று ஒதுங்கித் தனியே சென்றேன். மரியநாயகத்திற்கு நான் ஆசிரியனாக இருந்தவன். எனது மாணவன் என்ற முறையில் எனது நல்லாசிகளைக் கூறினேன். தெரேசம்மா என்னைக் கண்டதும் தலை குனிந்துகொண்டாள். மரியாயின் சேனையாளர் என்ற முறையில் நான் அவள் வீட்டுக்குள் சென்றதும், உள்ளே அனுமதிக்க மறுத்தவளல்லவா? எப்படித் தலைநிமிர்ந்து பேசமுடியும். என்னைக் கண்டதும் சற்று ஒதுங்கியே நின்றாள். அவள் அப்படி ஒதுங்கினாலும் நான் வலியச்சென்று அவளுடன் பேசினேன். நீண்ட நேரம் பேசினேன். அப்படிப் பேசியபோதுதான் அவள் எவ்வளவு பெரிய மாற்றமடைந்திருக்கிறாள் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. ''கெட்டபின்பு ஞானி'' என்று சொல்லுவார்களே அதுபோல தெரேசம்மா கெட்டுப்போனாலும், அந்தப் பாவ வாழ்வைவிட்டு ஞான வாழ்வை மேற்கொண்டுவிட்டாள். அவளுடைய இன்றைய நிலையில் பழைய தெரேசம்மாவை ஒப்பிட்டு ஒருமுறை நினைத்துப் பார்க்கிறேன்.

நல்லநாயகம் தெரேசம்மாவைத் திருமணஞ் செய்து வசிக்கத்தொடங்கியபோதுதான், எனக்கும் அவர்களைத் தெரியும் – அதிலும் மரியாயின் சேனையில் சேர்ந்து நான் ஊழியம் செய்யும் சந்தர்ப்பத்தில்தான் அறிமுகமானார்கள். நல்லநாயகம் பெயருக்கேற்ற நல்ல மனிதர். ஆதிக் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். தேவபக்தியும் நல்லொழுக்கத்தையும் பேணி நடப்பவர். தெரேசம்மாவும் நல்லவளாகத்தானிருந்தாள். வட்டமான பரந்த முகமும், வளிப்பான உடற்கட்டும், நல்ல அளவான உயரமுங்கொண்ட அழகியாகத் திகழ்ந்தாள். இல்லற சீவியத்தில் மரியநாயகம் மட்டுந்தான் இவர்களுக்குப் புத்திர பாக்கியம். இதுவரை அமைதியாக ஓடிய இவர்களது இல்லற சீவியத்தில் மரியநாயகம் பிறந்தபின் சிறுசிறு சச்சரவுகள் ஏற்பட்டன. நாளடைவில் இது வலுப்பெற்று ஊரறிந்த சங்கதியாகி, என் காதிலும் அடிபட்டது. தெரேசம்மாவைக் கடவுள் அழகியாகப் படைத்தபோதும் அதற்கேற்ற நல்ல குணத்தைக் கொடுக்கவில்லை, நல்லநாயகம் மரியாதைக்குப் பயந்து எவ்வளவுதான் விட்டுக் கொடுத்தாலும், அவ்வளவும் தனக்குப் பயந்துதான் செய்கிறார் என்று புருஷனை அதிகாரம் பண்ணத் தொடங்கிவிட்டாள் அந்தப் பெண். இப்படியாக புருஷனை அடக்கியாளும் பெண்கள் எத்தனைபேர் நமது நாட்டிலிருக்கிறார்கள். திருமணப் பூசையின்போது குருவானவர் கூறும் அறிவுரைகளைச் சரிவர மனதிற் கொள்ளாததும், வேதாகமங்களில் தம்

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணிக்கை ... ...

[10ம் பக்கத் தொடர்ச்சி]

பதிகள் கடமைகள் பற்றிய விளக்கங்களை அறியாததும் இதற்கு ஒரு காரணமாகும். நல்லநாயகம் கோயில், கூட்டம், தேவ தொண்டு என்று எத்தனை சேவை செய்தாலும், அவருடைய மனைவி அவருடன் ஒத்துழைக்கவில்லை. ஒத்துழைக்காவிடில் ஊறு செய்யாமலாவது இருக்கலாம். ஆனல் தெரேசம்மாவோ அழகாக உடுத்துவதிலும், உண்பதிலும், வீண் வம்பளப்பதிலுமே அதிக நாட்டம் செலுத்தினுள். மனைவியின் போக்கை வெறுத்தாலும், அதைக் கணவனுல் கண்டிக்கமுடியவில்லை. அவரோ மானஸ்த்தர், அவளோ பொல்லாத வாய்க்காரி. வாய் திறந்தால் முழுவதும் தூஷணை வார்த்தைதான். இதனுல் நல்லநாயகம் மனமுடைந்துவிட்டார். தனது கஷ்டங்களையெல்லாம் கடவுளிடம் சொல்லி முறையிடுவதைத் தவிர அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தனது மகனையாவது நல்ல வழியில் வளர்க்கவேண்டும் என்று, ஊரில் உள்ள கத்தோலிக்க பாடசாலையில் சேர்த்துவிட்டார். ஆனுலும் அவர் மனத்துயரம் தீரவில்லை. தனது மனைவிக்காக கடவுளை மிக உருக்கமாக வேண்டிக்கொண்டார். வீட்டைவிட கோயில்களிலே தனது பொழுதை அதிகமாகக் கழித்தார். எத்தனை செய்தாலும் சோதனைக்காலம் நீடித்திருந்தது. அயலவர்கள் தனது மனைவியையும் பிற ஆடவரையும் இணைத்துப் பேசிய போது, நல்லநாயகம் துடித்துவிட்டார். ''இறைவா! இதற்கொரு முடிவில்லையா, இன்னுமேன் என்னை உயிருடன் விட்டுவைத்திருக்கிருய்'' என்று புலம்பினுர். இருந்தென்ன இறந்தென்ன என்ற அவல நிலை ஏற்பட்டது அவருக்கு.

திடீரென்று நல்லநாயகத்தைக் காணவில்லை என்ற செய்தி கேட்டதும் எனக்குப் பகீரென்றது. இப்படி நடக்குமென நான் எதிர்பார்த்ததுதான், ஆனல் இவ்வளவு சீக்கிரத்தில் நடைபெறுமென்று நினைக்கவில்லை. செய்தி கேட்டு அவர்பேரில் பரிதாபப்படாதவர்களே இல்லை. ஊரவரும் உற்ருரும் உறவினரும் பரிதாபப்படுவதைத் தவிர அவர்களால் வேருென்றும் செய்யமுடியவில்லை. தெரேசம்மா இவைகளைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தோன்றவில்லை, இதைப்பற்றி விசாரித்ததற்கு சரியான பதிலும் சொல்லவில்லை. அதற்குமேல் வற்புறுத்திக்கேட்க எவரும் முன்வரவில்லை. ஏனெனில் அவளைப்பற்றித்தான் எல்லோருக்கும் தெரியுமே.

மரியாயின் சேனை ஊழியர்கள் இதில் தலையிட்டு சமாதானம் செய்ய முன்வந்தனர். அதற்கும் நல்லநாயகம் இருக்கவில்லையே. அன்று மனமுடைந்து வெளியேறியவர் பிறகு திரும்பவுமில்லை, உயிருடன் இருக்கிருரா? இல்லையா? என்ற செய்தியும் வரவில்லை. இப்படி சமாதானம் செய்துவைக்க முற்பட்ட, சேனையாளர்களையும் அவமானப்படுத்துவது போல பேசி அனுப்பிவிட்டாள் அந்தக் கொடியவள். மரியநாயகம் சிறுவன் எதையுமே அறியமாட்டான். சில சமயம் தன் அப்பாவைப்பற்றி அம்மாவிடம் கேட்பான். அப்படியான சந்தர்ப்பங்களில் அவனை அடித்து அடக்கிவிடுவாள். பிறகு இதைப்பற்றி பேசுவதைவிட்டு, தன் பிஞ்சுமனதில் அப்பாவைப் பற்றி நினைத்துச் சந்தோஷமடைவான். இப்படியான கஷ்டங்கள் அவனுக்கு இருந்தாலும் படிப்பில் கெட்டிக்காரனுக விளங்கினுன். தெரேசம்மாவிற்கோ அவனது படிப்பிலோ, முன்னேற்றத்திலோ எள்ளளவும் அக்கறையில்லை. ஆடவர் நட்பும், குடியும், கும்மாளமுமாக அவளது லீலைகள் பெருகிக்கொண்டிருந்தன. கணவனைத் தேடவுமில்லை, பார்க்கவுமில்லை. இதற்கான முயற்சிகள் எடுக்கவுமில்லை. தானும் ஒரு பெண், அதிலும் கத்தோலிக்கப் பெண், தான் செய்வது ஆண்டவனருளிய ஆரும் கட்டளைக்கு விரோதமானது, இதை விட்டுவிடவேண்டும், பாவ மரணத்தின் முடிவு நரக நெருப்பு என்ற, எண்ணங் கவலையற்று, மேலும் மேலும் அந்தப் பாவச் சகதியில் புரண்டாள். இதனுல் அவளுடைய ஆத்துமத்தில் பாவச்சேறு திட்டுத்திட்டாகப் பிடித்துக்கொண்டது. புறக்கண்ணுக்கு அழகியாகத் தெரிந்தாலும், அகக்கண்ணுக்குக் குஷ்டரோகியாகக் காட்சியளித்தாள். இதையிட்டு அவளுக்கு யாராவது புத்திமதிகளைக் கூறினுல், அவர்களை வாயில் வந்தபடி திட்டியனுப்பிவிடுவாள், அல்லது கேலிபண்ணி அனுப்புவாள். இந்த அட்டகாசங்களைப் பொறுக்கமாட்டாமல் அயலவரும் அவளை அந்த வீட்டில் வசிக்கவிடாமற் பல தொல்லைகளைக் கொடுத்தனர். அவளும் இவர்களது பயமுறுத்தலுக்குப் பணியவில்லை. இதனுல் அடிபிடிப்பட்டு பொலீஸ் வரவேண்டி நேரிட்டபோது, இனியும் அந்த வீட்டில் குடியிருப்பது உசிதமல்ல என நினைத்தாள். ஊருக்கு ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் ஒரு வீடு எடுத்து அதில் சீவித்துவந்தாள். அவளுக்கு அது பலவிதத்திலும் நல்லதாக இருந்தது. ஆனுல், மரியநாயகம் தினமும் பள்ளிக்கூடத்திற்கு வெகு தூரம் நடந்துசெல்ல வேண்டியிருந்தது. இதைத் தாயிடம் சொன்

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணிக்கை ... ...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

னுல் அடிப்பாளே என்று பயந்து அந்தத் துன்பத்தையும் தானே அனுபவித்து வந்தான். படிப்பில் கெட்டிக்காரனுன மரியநாயகத்திற்கு ஆசிரியர்களின் நல்மதிப்பும் இருந்தது. வருடமொரு வகுப்பாக முன்னேறி S. S. C. சித்தியடைந்தபோது அவனுக்குத் தாயின் நடத்தை பிடிக்கவில்லே. இப்பொழுது மரியநாயகம் சிறுவனல்ல வயதுவந்த வாலிபன். தனது தாயைப்பற்றி பலரும் பலமாதிரியாகப் பேசியது, சில இடங்களில் அவனேத் தலே குனியவைத்தது. தகப்பனேப்போலவே, தேவ தொண்டில், தனது கவனத்தைச் செலுத்தி, பல சேவைகள் செய்வதால், பெரியவர்களின் நன்மதிப்பையும், பாராட்டுதல்களேயும் பெற்றிருந்தான். இப்படியான ஒரு நல்ல பிள்ளேக்கு தன் தாயின் செயல் எப்படி இருக்கும்? தாய்க்கும் மகனுக்கும் எந்த நேரமும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. சிறுவனுயிருந்தபோது அவனே அடித்து அடக்கினுள், ஆனல் இன்று அவன் ஒரு வாலிபன்; எனவே தெரேசம்மா செய்வதற்குத் திகைத்தாள்.

மரியாயின் சேனே ஊழியனுக நான் பல முறை சென்றிருக்கிறேன். கேலியும் கிண்டலுமாகப் பேசுவாள். சில சமயம் ''கோயிலும் குளமும், உங்களுக்கு வேறு வேலேயில்லேயா மாஸ்டர்'' என்று முகத்திலடித்தாற்போற் கேட்பாள். அப்படி அவள் என்ன சொன்னுலும் நாங்கள் அடிக்கடி அங்கு சென்று புத்தி சொல்லிக்கொண்டே வந்தோம். இந்த முடியாத பிரச்சினேக்காக எங்கள் தினசரிச் செபங்களிலும் வேண்டிக்கொண்டோம். ஊரவர் அவளே விபசாரி என்று ஒதுக்கியபோதும், மரியாயின் சேனேயாளராகிய எங்களால் அப்படி ஒதுக்கமுடியவில்லே. மந்தையை விட்டுச்சென்ற ஒரு ஆட்டுக்குட்டியைத் தேடிச்சென்ற இடையனேப்போல, சேனே ஊழியர்களும் அடிக்கடி சென்று புத்திமதிகள் கூறிவந்தனர். இந்த நிலேயில் எனக்கு மாத்தளேக்கு மாற்றம் கிடைத்து நான் போய் விட்டேன்.

அன்று அவளே அந்தநிலேயிற் பார்த்துவிட்டு, இன்று இந்த நிலேயில் பார்த்தால் எப்படியிருக்கும்? இதுதான் எனது ஆச்சரியத்திற்குக் காரணம். மாற்றமுடியாத ஒரு நிலேயிலிருந்து மாறி மண்டியிட்டு நிற்கும் தெரேசம்மா தனது பாவத்துக்காக அழுதாள், முடிவில்லாமல் அழுதுகொண்டேயிருந்தாள். மரியநாயகத்தின் உருக்கமான மன்ருட்டும், மரியாயின் சேனேயினரது அயராத உழைப்புந்தான் அவளே தூயவளாக்கியது. மரியமதலேனுள் போல தன் பாவங்களே யெல்லாம் அழுது கண்ணீரால் கழுவிவிட்டாள். தன் கணவனுக்குச் செய்த துரோகமும், அவரது பிரிவும், அவளது மனதை பெரும்பாடு படுத்தியது. மனதை வருத்திச் செபித்தாலும், உடலே வருத்தித் தவம் செய்தாலும் மனம் ஆறவில்லே. எனவே தனது சகல பாவங்களுக்குப் பிராயச்சித்தமாகவும், தன்னேப் பாவத்திலிருந்து மீட்டிரெட்சித்த ஆண்டவருக்கு நன்றியாகவும், எந்தத் திருப்பணியை அலட்சியப்படுத்தினுளோ, அதற்கே தன் ஒரே பேருன மகனே ''காணிக்கை''யாக ஒப்புக்கொடுத்தாள்.

(யாவும் கற்பனே)

---

## வாழ்விலோர் ... ...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கூடச் சமுகமாயிருந்தமை நம் நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்கு நற்குறியாய் அமைந்ததை அன்று கண்டேன்; பெருமிதங் கொண்டேன். மதங்களின் தலேவர்கட்கிடையே இன்று மலர்ந்துள்ள இவ்வித நல்லுறவு, ஏன் ஈழத்தின் எல்லாச் சாதி, சமூக, சமய மக்களிடையேயும் இலங்கக்கூடாது?

''எனது சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன்'' (அரு: 14.27) எனக் கூறிய இறைமகனின் வாக்குறுதியை உறுதிப்படுத்தி, நம் பரி. தந்தை தம் சமாதானத்தையே நம்மவர்க்கும் அளித்த அருமை ஆழ்ந்து உணர வேண்டியது; அநுபவிக்கவேண்டியது.

இவ்வாறு பரி. பாப்பரசரின் வருகை நம் மக்கள் அனேவரிடையேயும், உயர்ந்த சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, பரஸ்பர உதவி ஆதியாம் அருங்குணங்களே வளரச்செய்து, இறைவன் தரும் சமாதானம் நம்மனேவரையும் ஒருங்கிணேப்பதாக. அவரது ஆசீரால் நம் நாடு சுபீட்சமடைந்து, அன்று அடைந்த பெரும் புகழை என்றும் பெற்று ஓங்கி வளர்வதாக.

வாழ்க, பரிசுத்த பாப்பரசர்!
வளர்க அவர்தம் திருப்பணி!!

**பொ. இராமலிங்கம்**
தலேவர்.
திருமலே மட்டக்களப்பு மறை மாவட்ட
ஐக்கிய சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்நகரில் நிகழ்ந்த
# அகில இலங்கை மறைக்கல்வி மகாநாடு.

"திரு"

ஆவலுடன் ஆண்டுகள் பல காத்திருந்த ஆசை நிறைவேறியது. அது இலங்கைவாழ் தமிழ். கத்தோலிக்கர்கள் அனைவரும் ஒன்று கூடி தமது மறையைப்பற்றி ஆழமாக அறிய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியதுதான், அதுவும் யாழ்ப்பாணத்தில். இந்த நன்னாள் ஒரு நாளிலல்ல, இரு நாட்களில் மிக்க ஆயத்தத்துடனும் தகுந்த ஏற்பாடுகளுடன் பொன்னாளாக அமைந்தது.

இலங்கையிலுள்ள அத்தனை மேற்றிராசனங்களிலுமிருந்து பிரதிநிதிகளும், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள பங்குகளிலிருந்து பிரதிநிதிகளுமாக ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இம் மகா நாட்டில் கலந்து கொண்டனர்.

மார்கழி 15ம் நாள், அதுதான் இம்மகா நாட்டின் ஆரம்ப நாள். காலை 9-00 மணிக்கு யாழ்நகர் ஆயர் குத்துவிளக்கு ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். மேடையில் மற்றும் உதவி ஆயர்கள் B தியோகுப்பிள்ளை L. R. அன்ரனி அவர்களும் யாழ்ப்பாண மேற்றிராசன மறைக்கல்வி குழுவின் அதிபர் அருள்திரு. G. T. பாலசுந்தரம், மட்டக்களப்பு அதிபர் H. பொன்னையா அடிகள் முதலியோர் அமர்ந்திருந்தனர். விழாத் தலைவர் மறைக்கல்வியின் அவசியத்தையும், இம் மகாநாடு பல கஷ்டங்களுக்கு மத்தியில் நடைபெறுவது பற்றி தமது மகிழ்ச்சியையும் தெரிவித்து சுருக்கமாக தமது தலைமையுரை முடித்துவிட, மகா நாட்டின் முதல் பேச்சாளர் உதவி ஆயர் B. தியோகுப்பிள்ளை ஆண்டகை "**பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்றோரின் பங்கு**" என்ற பொருள்பற்றி பேசுகையில் பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டுவது பெற்றோரின் இயற்கை உரிமையெனவும், பெற்றோர் தமது சொல்லாலும் முன்மாதிரியாலும் தங்கள் பிள்ளைகளுக்கு மறைப் பயிற்சி அளிக்க வேண்டுமென வும், பாடசாலைகளில், பங்குகளில், மற்றும் நிறுவனங்களில் அளிக்கப்படும் மறைக்கல்வி மட்டில் கூடிய அக்கறை கொள்ளவேண்டுமெனவும் எடுத்துரைத்தார். பாடசாலைகளில் அளிக்கப்படும் மறைக்கல்வியின் தரம் குறைந்து வருவதால் பெற்றோர் திருச்சபையின் பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து, அவைகளோடு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ஆண்டகையின் பேச்சையடுத்து தேநீர் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சமுகமளித்தவர்கள் 21 குழுக்களாக பேச்சாளரால் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கப் பிரிந்தனர்.

கலந்துரையாடலின் பின்பு அனைவரும் இம் மகாநாடு நடந்த புனித பத்திரிசியார் கல்லூரி ஆலயத்திற்குள் கூடினர் கூட்டுப் பலியில் பங்குபெற. அதற்கு யாழ்ப்பாண துணை ஆயர் தலைமை தாங்கினார். பலியின்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்செய்தியைப் பரப்ப வேண்டிய கடமையை ஆகம நிகழ்ச்சிகளிலிருந்து ஆதரங்களுடன் அழகுற எடுத்தியம்பினார் வண. பொன்னையா அடிகள். மதிய உணவிற்காக அனைவரும் பிரிந்தனர். யாழ்நகரின் பங்குகளிலிருந்து வந்த பிரதிநிதிகளுக்கும் மற்றையோருக்கும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

முதல் நாளின் இரண்டாவது பேச்சரங்கை ஆரம்பித்து தலைமை தாங்கியவர் அருள்திரு பொன்னையா அடிகள். பேச்சாளர் திருமதி அந்தோனியா சாமிநாதர் யாழ்ப்பாண மாநகர உறுப்பினரும், சமாதான நீதிபதியும் தலைசிறந்த அனுபவமுள்ள ஆசிரியையுமாவர். அவரது சொற்பொழிவு கருத்துச் செறிந்ததும் மனோதத்துவ சாத்திர அறிவுரைகள் நிறைந்ததாகவும் அமைந்தது. "**பாடசாலைக்குச் செல்லுமுன் பிள்ளைகளுக்கு மறைப்பயிற்சி அளித்தல்**" எனும் பொருள் பற்றியே அவர் பேசினார். குழந்தையின் உள்ளம் இறைவன் குடிகொள்ளும் கோவில் என்பதை பெற்றோர் உணர்வதுடன், பிள்ளை அறிய

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்நகரில் ... ...

[13ம் பக்கத் தொடர்ச்சி]

வும் உணரவும் உதவி புரிய வேண்டும். உருபிகர மனப்பான்மையை பயன் படுத்தி மூட நம்பிக்கை, சகுண சாத்திரங்களை பாலர் உள்ளங்களில் இடம் பெறுது செய்தல் வேண்டும். மேலாக கடவுளின் அன்பைத் தனது தாய் தந்தையரில் பிள்ளை காணவும், உணரவும் ஆவன செய்யவேண்டும்.'' மேற் கூறியவை அவர்களின் பேச்சில் சிந்திய முத்துக்களில் சில.

பேச்சினைத் தொடர்ந்து கலந்துரையாடல் ஆரம்பமானது. கலந்துரையாடல்களுக்காகக் கொடுக்கப்பட்ட கேள்விகள் அதிகமானவைகளாக இருந்தமையினாலும், சிலர் தங்கள் சொந்தக்கருத்துக்களையே கூறவந்தமையினாலும் இன்றையப் பொது அரங்கு ஒழுங்கற்றதாகவும், உரைகள் இரசிப்பற்ற நீண்டவைகளாகவும் அமைந்தன. முழுநாளும் உன்னிப்பாக கேட்டும், சிந்தித்து கலந்துரையாடியுமிருந்தோருக்கு மாலை நிகழ்ந்த கதம்ப நிகழ்ச்சிகள் சிந்தைக்கு விருந்தாக விருந்தன. இந் நிகழ்ச்சிகளை ஒழுங்கு பண்ணியவர் அருள் திரு. சவரிமுத்து அடிகள். அவருடைய கலையார்வம் ஓங்க வாழ்த்துகின்றோம்.

இரண்டாவது நாள் அருள்திரு. G. T. பாலசுந்தரம் அடிகளின் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. அன்று காலைப் பேச்சாளர் வேறு யாருமல்ல பிரான்சிஸ்கன் மிஷனரிக்குழுவைச் சேர்ந்த சங்கை சகோதரி றேஸ். அவருக்குக் கொடுக்கப்பட்ட தலையங்கம் நீளமானதும் கடினமானதாயினும், தமது அறிவுத் திறனாலும், அனுபவத்தினாலும் கேட்டுக் கொண்டிருக்க சுவையுள்ளதாக அமைத்துவிட்டார்.

''**திருவருட் சாதனங்களைப் பெறுதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தல்**'' என்பது பற்றிப் பேசுகையில் அவர் அள்ளி யெறிந்த அறிவுரைகளில் சில: குடும்ப சீவியமானது ஒவ்வொருவரும் தம் சீவியத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுகின்றது. கடவுளுடன் ஒன்றித்தலாகிய நித்திய சீவியம் குடும்ப சீவியத்தில் தொடங்குதல் வேண்டும். இந்த ஐக்கியமானது பலனளிக்க கடவுளின் அருள்தான் உதவி செய்யும். பரிசுத்த சீவியத்தின் பிரதானமான அடித்தளம் தேவ திரவிய அனுமானங்களே. இவைகளைப் பிள்ளைகள் பெறுவதற்கு பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தில் நடக்கும் அன்றாடச் சம்பவங்களைக் கொண்டு விளக்கி ஆயத்தம் பண்ண வேண்டும். ஒரு குழந்தை ஒரு குடும்பத்தில் பிறந்தால் நாங்கள் அக் குழந்தையை திருமுழுக்கு என்னும் தேவதிரவிய அனுமானத்திற்கு ஆயத்தப்படுத்த முடியாது. ஆனால் நிச்சயமாக வீட்டில் உள்ள மற்றப் பிள்ளைகளை அக்குழந்தைச் சகோதரத்தின் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். திருமுழுக்குப்பற்றி அவர்களுடன் கதைப்பதற்கு இது தான் தக்கசமயமாகும். தேநீர் இடைவேளைக்குப் பின்பு கலந்துரையாடலுக்காகச் சபையினர் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

இன்றைய கூட்டுப்பலியில் தலைமை தாங்கியவர் துணை ஆயர் B. தியோகுப்பிள்ளை. திருப்பலியின்போது கண்டி மேற்றிராசன மறைக்கல்வி நிலைய அதிபர் சின்னப்பு அடிகள் திருவுரை நிகழ்த்தினர். பிறர்அன்பு இறையன்பென எடுத்தோதினர். தாயுமானவரின் பாடல்கள் அவர் வாயிலிருந்து சுவை ததும்ப இசைத்தன. திருப்பலியின்போது கூடியிருந்தோர் அனைவரும் பாடல்களிலும் செபங்களிலும் ஒன்று கூடி பங்குபற்றியது யாவரதும் மனதைக் கொள்ளை கொண்டது. இதுவல்லோ எமது பங்குகளில் தினமும் நடைபெறும் இறை ஆராதனையாக இருக்க வேண்டியதென எண்ணியவர் பலரிருந்தனர். மதிய உணவிற்குப்பின்பும், கலந்துரையாடல்கள் நடைபெற்றதைக்கண்டேன். காலையில் முடிந்திராத கேள்விகளுக்குப்பதில் அளிக்க அவ்வளவு ஆர்வமும் உற்சாகமும் அவர்களிடையே இருந்தன. பல குருக்களும், கன்னியர்களும் பங்கு பற்றி உற்சாக மூட்டினர்.

மகாநாட்டின் இறுதிப் பேச்சாளராக மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியின் தற்போதைய துணைத் தலைவர் திரு. L. M. யோசப் B. A. அவருடைய பேச்சு **இன்றைய இளைஞர்களின் பிரச்சனைகளைப்** பற்றியது. இவ்விளைஞர் இன்றைய உலகில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் சக்தி. அணுச் சக்தியைவிட உயர்ந்தது. அதனை நன்மைக்கும் தீமைக்கும் பாவிக்கலாம். இளைஞர்கள் உலகத்தினை அறிந்தவர்கள். வேகமாகக் கற்று, குறுகிய காலத்தில் முதிர்ச்சி அடைகின்றனர்கள். பொதுவில் வெளிஅமைப்பு முறைகளை, சொல்லிலும் செயலிலும் காணப்படும் ஒற்றுமையீனத்தை, வெறும் வெளிப்பகட்டுக்களை வெறுத்து, நேர்மை, நியாயம், கண்ணியம் போன்றவற்றை வரவேற்கின்றனர்கள். எனவே அவர்களது இன்றைய பிரச்சனைகளுக்கு பழைய விடைகளும்,வழிகளும் திருப்தி

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்நகரில் ... ...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

யளிப்பதாகவில்லை. மூத்தோர் திட்டங்கள் தோல்வியுற்று செயலற்று விட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றை நேரில் கண்டிருக்கின்றார்கள். இத் தோல்விகளை இனிமேலும் மூடிமறைக்க முடியாது. இது மறை வாழ்விலிருப்பதையும் மறையுண்மையை எடுத்துரைப்போர் வாழ்க்கை அவ்வுண்மையின் அடிப்படையில் அமையாதிருப்பதையும் காண்கின்றனர். உண்மையான அர்த்தமும் பொருத்தமுமில்லாத இறைவழிபாடுகளிருப்பதைக் கண்டு மனங் கோணிப் போகிறார்கள்.

பேச்சாளரின் துடிப்பும் ஆழமுமான கருத்துக்கள் சமுகமாயிருந்தோரை சிந்திக்க வைத்ததை பொது அரங்கில் கலந்துரையாடல்களின்போது கிடைத்த விடைகளிலிருந்து அறிய முடிந்தது. இன்றைய இளைஞர்களுக்கு பெற்றோர், ஆசிரியர், குருகுலம் ஏற்ற வழிகளில் வழிகாட்ட முன் வந்தது, எந்த இளைஞனினதும் இதயத்தை குளிரப்பண்ணியிருக்கும். மூத்தோர் குலத்திற்கு இளைஞர்கள் சார்பில் நன்றி.

எமது மகா நாட்டின் இறுதிக் கட்டம், சிந்தித்தவைகளை செயல் படுத்தல். கலந்துரையாடல்களில் கண்ட உண்மைகளில் சில செயல் திட்டங்களாக உருவாக்கி அமைத்தனர்; அவை இக்கட்டுரையின் இறுதியில் காணப்படுகின்றன. நன்றிக்கடன் நவில முன்வந்த ஆசிரியர் மிராண்டா அவர்கள் இம் மகா நாட்டினை பாபெரும் மகிழ்ச்சி நாளாக அமைத்த அனைவரையும், குறிப்பாக யாழ்ப்பாண மறைக்கல்வி அதிபர் அருள்திரு G. T. பாலசுந்தரம் அடிகளின் அயராத உழைப்பையும், ஆர்வத்தையும் எடுத்துரைக்கத்தவறவில்லை. இறுதியாக இறைவனையும் போற்றிப்புகழ, நன்றிக்கடன் செலுத்த அனைவரும் ஆலயம் புகுந்தனர். என்றோ இதுபோல் இன்னோர் மகாநாடு! என்று ஏங்கிய பல உள்ளங்களில் எனதும் ஒன்று.

### மறைக்கல்வி மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தகுந்த முறையில் மறைக்கல்வி ஊட்டுவதற்கு உறுதுணையாக,ஒவ்வொரு பங்கிலும் பெற்றோர் மன்றம் அமைக்கப்பட்டு, அது நன்றாக இயங்குவதற்கு ஆவன செய்யவேண்டும்.
2. ஒவ்வொரு பங்கிலும் கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபை கூடிய விரைவில் நிறுவப்படவேண்டும்.
3. பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதற்குப் பெற்றோரைப் பயிற்றுவதற்கு உதவக்கூடிய பிரசுரங்களை மறைக்கல்வி நடுநிலையங்கள் தயாரித்துப் பெற்றோர் மன்ற மூலம் வழங்கவேண்டும்.
4. ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பிரதியாவது, புதிய ஏற்பாட்டின் பிரதியாவது இருக்க வேண்டும்.
5. உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனம் குமரப்பருவத்தில் பெறப்படுவதுதான் கூடிய பயனைக் கொடுக்குமென்று இச் சபை கருதுகின்றது.
6. திருமணத்திற்கும் குடும்ப வாழ்விற்கும் வாலிபப்பராயத்தினரைப் பயிற்றுவிக்கும் பொருட்டு "கானா மன்றங்கள்" பங்குகள் தோறும் நிறுவப்படவேண்டும்.
7. பங்கு, வட்டார, மேற்றிராசன ரீதிகளில் கத்தோலிக்க வாலிப வயதினர்களுக்கென மன்றங்கள் அமைத்து, உதவிகள் அளிக்கப்படல் வேண்டும்.
8. கத்தோலிக்க இளைஞர்கள் மற்றும் சமுதாயங்களைச் சேர்ந்த இளைஞர்களோடும் சேர்ந்து பொதுநலனுக்காக உழைத்தல் வேண்டும். ✱


## தொண்டன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | (தபாற் செலவு உட்பட) | 4-00 |
| 6 மாதங்களுக்கு | (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி | ( ,, ,, ,, ) | -30 |

விளம்பர விகிதம்
(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 3 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 4 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 40/- |
| 8 × 6 | ,, | ரூ. 50/- |
| 9 × 7 | ,, | ரூ. 60/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொண்டன் நிர்வாகி,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ தீபாவளி

இந்துமத தீபாவளி ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்தவ தீபாவளியோ மாசி மாதம் 2ந் திகதி கொண்டாடப்படுகின்றது. கிறிஸ்து பெத்திலேமில் பிறந்தபோது அவர் யூதர்களின் மீட்பரும் அரசரும் மட்டுமன்று, உலக மீட்பரும் அரசர்க்கு அரசருமென்று காட்டும் பொருட்டு கீழ்த்திசை ஞானிகள் வந்து, அவருக்கு அடிபணிந்து, கொடை வழங்கி அவரை ஆராதித்தனர். இது **திருக்காட்சித் திருநாளன்று** (தை 6ந் திகதி) கொண்டாடப்படுகிறது.

கிறிஸ்துநாதர் பிறந்த 40ம் நாள் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவ்வேளை சிமியோன் என்னும் இறைவாக்கினர் அவரைத் தனது கையில் ஏந்தி, ''**இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி, இதுவே இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை**'' (லூக். 2, 32) என்று எடுத்துரைத்தார். இதன் ஞாபகம் மாசி மாதம் 2ந் திகதி **ஆண்டவரின் காணிக்கைத் திருநாளாகக்** கொண்டாடப்படுகின்றது. அன்று தீபங்கள் மந்திரிக்கப்பெற்று, பவனியாய் கொண்டுசெல்லப்படுகின்றன. **இதுவே கிறிஸ்தவ தீபாவளி.** இதை மறந்து இந்துமத தீபாவளித் திருநாளை நம்மில் ஒரு சிலர் கொண்டாட முயற்சிப்பது மடமையாகும்.

## இறைவழிபாட்டுச் ... ...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வதும் இறைவனின் குடும்பத்தில் இணைக்கப்பட வேண்டுமென்று மன்றாடுகின்றனர்.

இவ்வாறு, ஞானஸ்நானம் உறுதிப்பூசுதல், தேவநற்கருணை எனும் மூன்று திருவருட்சாதனங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய முறையில் இணைந்து, விசுவாசிகள் கிறிஸ்துவின் முழுப்பருவத்தின் அளவை அடையவும், இறைமக்கள் திருச்சபையிலும் உலகிலும் தங்கள் பணியைச் செய்யவும் துணைபுரிகின்றன. ★


## சிறந்த 3 கத்தோலிக்க நூல்கள்

**1. புனிதர் பிரான்சிஸ் அசிசியார். ரூ. 7-50**

இலங்கை சாகித்திய மண்டலத்தின் மூதற் பரிசுபெற்ற முதலாவது கத்தோலிக்க நூல். ஆசியாவில் வெளியான தரமான நூல்களில் ஒன்றென மதிக்கப்பெற்று ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நூல்நிலையப் பட்டியலில் 76-913962ம் இலக்கத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட நூல். United States Library of Congress Card No. 76-913962.

**2. கர்த்தரின் செபமும் கிறிஸ்தவ பூரணத்துவமும். ரூ. 1-50**

இலங்கையிலும், இந்தியாவிலும் மிகச் சிறந்த பாராட்டுக்களைப் பெற்றது.

**3. பதுவை அந்தோனியார். ரூ. 2-25**

சமீப வெளியீடு. நவீன ஆராய்ச்சியின் மலர்ச்சி.

மூன்று நூல்களையும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க: **ரூ. 12-00**

முற்பணமாக ரூ. 5-00 அனுப்புவோருக்கு 3 நூல்களும்
V. P. P. யில் அனுப்பிவைக்கப்படும்.

புத்தக வியாபாரிகட்குச் சலுகைகள்

கிடைக்குமிடம் :-
J. ஜூலியஸ் இராசையா
6, சென் மேரிஸ் ஒழுங்கை,
ஊர்காவற்றுறை.


இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில, மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் [illegible]-1-71ல் வெளியிடப்பட்டது.